ந.க.எண்: நுபா2/195/2024 நாள்:05 .06.2024	உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, ஆணையாளர் அலுவலகம், சேப்பாக்கம்,சென்னை-5

முதல் காலாண்டு கூட்ட நடவடிக்கைக் குறிப்புகள்

உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை, முதன்மைச் செயலாளர் / ஆணையாளர் அவர்களின் தலைமையில் 03.06.2024 அன்று காலை 11.00 மணி அளவில், மாநில அளவிலான தன்னார்வ நுகர்வோர் அமைப்புகளுடன் "எரிவாயு நுகர்வோர் தொடர்புடைய பிரச்சனைகள்" என்ற தலைப்பின் கீழ் காலாண்டு கூட்டம், காணொளி வாயிலாக இத்துறையின் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் இந்தியன் ஆயில் கார்பரேஷன் நிறுவனம் சார்பில் துணை பொது மேலாளர் திரு. ராஜேஷ் பீதாம்பரம் , மற்றும் பாரத் பெட்ரோலிய கார்பரேஷன் நிறுவனம் சார்பில் துணை மேலாளர் திரு.ரமண குமார் மற்றும் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் இணை ஆணையாளர், துணை ஆணையாளர்-2, மற்றும் மாநில முகவரிப் பட்டியலில் இடம்பெற்றுள்ள தன்னார்வ நுகர்வோர் அமைப்பு பிரதிநிதிகள் காணொளி வாயிலாக கலந்து கொண்டனர்.

கூட்டத்தின் தொடக்கத்தில் அனைத்து அலுவலர்கள் மற்றும் தன்னார்வ நுகர்வோர் அமைப்புகளின் பிரதிநிதிகளை வரவேற்ற முதன்மைச் செயலாளர்/ஆணையாளர், அவர்களுடனான அறிமுகத்துடன் "எரிவாயு நுகர்வோர் தொடர்புடைய பிரச்சனைகள்" குறித்து நுகர்வோருக்கு ஏற்படும் பிரச்சனைகள்/கோரிக்கைகளை முன்வைக்க கேட்டுக் கொண்டார். இக்கூட்டத்தில் தன்னார்வ நுகர்வோர் ஆர்வலர்களால் விவாதிக்கப்பட்ட பிரச்சனைகள் மற்றும் கோரிக்கைகளுக்கு முதன்மை செயலாளர் / ஆணையாளர் அவர்களால் அளிக்கப்பட்ட விளக்கங்கள் பின்வருமாறு.

1. அனைத்து எரிவாயு நிறுவன விநியோகஸ்தர்கள் தங்களிடம் பணியாற்றும் எரிவாயு சிலிண்டர் எடுத்து செல்லும் ஊழியர்கள் கூடுதல் கட்டணம் பெறுதல், டிஜிட்டல் எடை அளவுகள், (FESTO leak detector kits) ஃபெஸ்டோ லீக் டிடெக்டர் கிட்களை எடுத்து செல்வது . சீருடைகள் மற்றும் அடையாள அட்டைகள் அணிந்து செல்வது குறித்து கள அலுவலரர்களால் ஆய்வு செய்யுமாறு எண்ணெய் நிறுவனங்களுக்கு முதன்மைச் செயலாளர்/ஆணையாளர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது.

Scanned with OKEN Scanner

2. உலக நுகர்வோர் தினம் / தேசிய நுகர்வோர் தினம் நிகழ்ச்சிகளில் எண்ணெய் நிறுவனங்களால் நுகர்வோர்களுக்கு ஏற்படும் பிரச்சனைகள் குறித்து விழிப்புணர்வுகள் ஏற்படும் நோக்கில் Stall (அங்காடி) அமைப்பது குறித்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என முதன்மைச் செயலாளர்/ஆணையாளர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது.

3. மாவட்ட அளவில் தன்னார்வ நுகர்வோர் அமைப்புகள் மற்றும் எண்ணெய் நிறுவனங்களுடன் நடைபெறும் மாதந்திர கூட்டங்கள் தவறாமல் நடத்துமாறு அனைத்து மாவட்டங்களுக்கு அறிவுறுத்தப்படும் என்றும், இக்கூட்டத்தில் எண்ணெய் நிறுவன கள அலுவலர்கள் கட்டாயமாக கலந்து கொள்ளவேண்டும் என முதன்மைச் செயலாளர்/ஆணையாளர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது.

4. எரிவாயு விநியோக குறித்த நுகர்வோர்களின் கோரிக்கை மற்றும் குறைகள் உடனுக்குடன் கள அலுவலர்களுக்கு தெரிவிக்க கள அலுவலர்களின் வாட்ஸ்ஆப் தொலைபேசி எண் விவரம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

5. எரிவாயு உபயோகம் குறித்த செயல்முறை விளக்கங்கள் பாதுகாப்பு மருத்துவமனை (Safety Clinic) மற்றும் எல்.பி.ஜி பஞ்சாயத்துகள் ஆகியவை மூலமாக எல்பிஜி விநியோகஸ்தர்களால் அவர்கள் செயல்பாட்டுப் பகுதிகளில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன என எண்ணெய் நிறுவன அலுவலரால் தெரிவிக்கப்பட்டது.

6. உஜ்வாலா திட்டத்தில் எரிவாயு நுகர்வோர்கள் முகவரி மாற்றம் செய்ய உரிய ஆதாரத்துடன் எழுத்துப்பூர்வ கோரிக்கையினை எரிவாயு விநியோகஸ்தர்களிடம் சமர்ப்பிக்கும் பட்சத்தில் முகவரி மாற்றம் செய்யப்படும் என எண்ணெய் நிறுவன அலுவலரால் தெரிவிக்கப்பட்டது.

7. எரிவாயு நுகர்வோர்கள் தங்களின் பெயர், வங்கி கணக்கு எண், IFSC குறியீடு ஆகியவை பொருத்தமாக இருக்கும் பட்சத்தில் எரிவாயு மானியம் கிடைக்கும் என்றும், இவற்றில் ஏதேனும் மாற்றங்கள் இருப்பின் எரிவாயு விநியோகஸ்தர் அணுகி சரியான விவரங்கனை சமர்ப்பிக்குமாறு எண்ணெய் நிறுவன அலுவலரால் தெரிவிக்கப்பட்டது.

8. அனைத்து எரிவாயு சிலிண்டர்களும் மீண்டும் நிரப்பப்படும் போது O வளையங்கள் மாற்றம் செய்யப்பட்டு எரிவாயு நுகர்வோர்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன என எண்ணெய் நிறுவன அலுவலரால் தெரிவிக்கப்பட்டது.

9. நுகர்வோர் பெறும் எரிவாயு சிலிண்டர் இரசீதில் நுகர்வோர் வழங்கவேண்டிய மொத்த தொகைக்கான விவரத்தினை குறிப்பிட எண்ணெய் நிறுவனங்களுக்கு முதன்மைச் செயலாளர்/ஆணையாளர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

Scanned with OKEN Scanner

10. நுகர்வோர்கள் எரிவாயு விநியோக குறித்த கோரிக்கைகள் மற்றும் குறைகள் எதிர்கொள்ளும் பட்சத்தில் https://ex.indianoil.in/EPICIOCL/faces/Grievance என்ற இணைதளத்தில் பதிவு செய்யுமாறு தன்னார்வ நுகர்வோர் அமைப்புகளுக்கு அறிவுறுத்தப்பட்டது.
11. எரிவாயு சிலிண்டர் கசிவின் காரணமாக விபத்துகள் , உடல் காயம் / இறப்பு ஏற்படுமாயின் விபத்து காப்பீட்டு குறித்து தகவல்கள் அறிந்து கொள்ள www.mylpg.in என்ற இணைதளத்தை அணுகலாம் என எண்ணெய் நிறுவன அலுவலர்களால் தெரிவிக்கப்பட்டது.

பெறுநர்

1. கூட்டத்தில் கலந்து கொண்ட அலுவலர்கள்
2. கூட்டத்தில் கலந்து கொண்ட தன்னார்வ நுகர்வோர் அமைப்புகளின் பிரதிநிதிகள்

நகல்

1. 'நுபா2 இருப்பு கோப்பு'

ஒம்/– ஹர் சஹாய் மீனா
முதன்மைச் செயலளார்/ஆணையாளர்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

முதன்மைச் செயலாளர்/
ஆணையாளருக்காக

06/06/24.

(VL)

Scanned with OKEN Scanner